# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | புவியியல் | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ 1-20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.

1) புவி தனது அச்சில் தன்னைத் தானே சுற்றுவதற்கு எடுக்கும் காலம்
   1. 365 நாட்கள்
   2. 23 மணித்தியாலங்கள்
   3. 23.5 மணித்தியாலங்கள்
   4. 24 மணித்தியாலங்கள்

2) புவி கோள வடிவமானது என்பதற்கான மிகப் பிந்திய ஆதாரம்
   1. இரவு பகல் தோன்றுதல்
   2. செய்மதிப் படங்கள்
   3. கடல் பயணங்கள்
   4. விமான ஒளிப்படங்கள்

3) புவியின் முனைவு விட்டம்
   1. 12757km
   2. 12714km
   3. 40077km
   4. 39943km

Education கல்வி අධ්‍යාපන

4) புள்ளியாக காட்டப்படும் வட அகலக் கோடு
   1. வடதுருவம்
   2. தென்துருவம்
   3. கடகக்கோடு
   4. மகரக்கோடு

5) கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய திசைகளுக்கும் பொதுவான நெடுங்கோடு
   1. சர்வதேச தேதிக் கோடு
   2. $179^0$ கி நெடுங்கோடு
   3. கடகக்கோடு
   4. ஆட்டிக் வட்டம்

6) நீரினால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பு
   1. தீவு
   2. தீவுக்கூட்டம்
   3. கண்டம்
   4. மேட்டு நிலம்

7) மகரக்கோடு ஊடறுத்துச் செல்லாத கண்டம்
   1. ஆசியா
   2. தென் அமெரிக்கா
   3. ஆபிரிக்கா
   4. அவுஸ்ரேலியா

8) ஆசியக் கண்டத்தினுள் அமைந்துள்ள கடல்
   1. மத்தியதரைக்கடல்
   2. பால்டிக்கடல்
   3. வடகடல்
   4. கஸ்பியன்கடல்

9) பிறேசில் நாட்டில் அமைந்துள்ள நகரம்
   1. சன்பிரான்சிக்கோ
   2. றியோடி ஜெனிரோ
   3. கைரோ
   4. டாக்கா



kalvi.lk

10) இலங்கை அமைந்துள்ள காலநிலை வலயம்

1. இடைவெப்ப வலயம்
2. முனைவுக் காலநிலை வலயம்
3. அயனவலயம்
4. ஈரவலயம்

) இலங்கையை இந்தியாவில் இருந்து பிரிக்கும் ஆளமற்ற நீரிணை

1. மலாக்கா நீரிணை
2. அயஸ் கால்வாய்
3. ஹோமுஸ் நீரிணை
4. பாக்கு நீரிணை

12) கிரீன்விச் நகரினூடாக ஊட றுத்துச் செல்லும் நெடுங்கோடு

1. $0^0$ நெடுங்கோடு
2. $180^0$ அகலக்கோடு
3. $0^0$அகலக் கோடு
4. $90^0$ அகலக் கோடு

13) இலட்சத் தீவுகள் அமைந்துள்ள சமுத்திரம்

1. அத்திலாந்திக் சமுத்திரம்
2. பசுபிக் சமுத்திரம்
3. இந்து சமுத்திரம்
4. அந்தாட்டிக் சமுத்திரம்

14) இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் அளவு

1. 156mkm²
2. 77mkm²
3. 510mkm²
4. 65610km²

15) இலங்கையின் தென்பகுதியில் அமைந்துள்ள முனை.

1. பருத்தித்துறை
2. சங்கமன் கந்த முனை
3. தேவேந்திர முனை
4. கொழும்பு

16) ஆள்புல எல்லையின் ஆளுகை உரிமம் பெற்ற தூரம்

1. 200 கடல் மைல்
2. 24 கடல் மைல்
3. 12 கடல் மைல்
4. 100 கடல் மைல்

17) இலங்கையில் 300 m க்கு மேற்பட்ட தரைத்தோற்ற வலயம்

1. கரையோர சமவெளி
2. உள்ளக சமவெளி
3. அலையுருவ சமவெளி
4. மத்திய மலைநாடு

18) இலங்கைக்குரிய வெப்ப அளவு

1. $27^0C - 30^0C$
2. $15^0C - 27^0C$
3. $30^0C - 31^0C$
4. $30^0C - 35^0C$

19) கடும் காற்றுடன் கூடிய மழையைக் கொடுப்பது

1. தென் மேற்கு பருவ மழை
2. வடகீழ் பருவமழை
3. மேற் காவுகை மழை
4. சூறாவளி மழை

20) இலங்கையில் விவசாயிகள் பெரும் போக நெல் அறுவடை செய்யும் காலம்

1. பெப்ரவரி
2. ஆகஸ்ட்
3. நவம்பர்
4. செப்ரெம்பர்



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1)

1) புவியியல் பாடத்தில் முதலாம் தவணைக்காக நீர் செய்த கணீப்பீட்டு வகைகள் இரண்டு தருக?

2) கணிப்பீட்டினை மேற் கொண்ட பொழுது நீர் எதிர்கொண்ட சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக?

3) கணிப்பீட்டினை மேற் கொண்டதால் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?

(6 புள்ளிகள்)

❖ பின்வரும் புவியியல் அம்சங்களிற்குரிய சரியான ஆங்கில எழுத்தினை வழங்கப்பட்ட உலகப்படத்தின் துணையுடன் எழுதுக.

1) கஸ்பியன் கடல் ( )


2) அத்திலாந்திக் சமுத்திரம் ( )

3) ஜப்பான் ( )

4) ஐஸ்லாந்து ( )

5) சீனா ( )

6) அவுஸ்ரேலியா ( )







kalvi.lk

2) 1) புவிச்சுற்றுகை என்றால் என்ன?
2) புவிச்சுற்றுகையால் புவியில் நிகழும் மாற்றங்கள் யாவை?
3) நெடுங்கோடுகள் என்பதை வரையறை செய்க.
4) தென்னரைக் கோளத்திற்குரிய பின்வரும் கோடுகளைப் பெயரிடுக.
A - $23.5^0$ B - $66.5^0$

(3x4=12 புள்ளிகள்)

3) 1) சமுத்திரங்கள் என்றால் என்ன?
2) இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இலங்கை தவிர்ந்த தீவுகள் 3 ஐப் பெயரிடுக.
3) மிகப் பெரிய சமுத்திரங்கள் 3 ஐ பெயரிடுக.
4) நிலப்பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள கடல்கள் 3 ஐப் பெயரிடுக.

(3x4=12 புள்ளிகள்)

4) 1) சார்பு அமைவிடம் என்றால் என்ன.
2) இலங்கைக்குரிய தனி அமைவிடத்தினைக் குறிப்பிடுக.
3) கடற் கரையோரம் கொண்ட நாடுகளின் எல்லையினை வரையறுக்கும் சட்டம் யாது.
4) கீழ்வரும் எல்லைக்குரிய இலங்கையின் கடல் எல்லைகளைப் பெயரிடுக.
A - 24 கடல்மைல் B - 200 கடல்மைல்

(3x4=12 புள்ளிகள்)

5) 1) உள்ளக சமவெளியில் காணப்படும் தரைத்தோற்ற உறுப்புக்கள் மூன்றைத் தருக.
2) சுற்றுலாப்பயணிகளைக் கவரும் பௌதீக அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3) இலங்கை மழைவீழ்ச்சியினைப் பெறும் முக்கிய மூன்று முறைகளைக் குறிப்பிடுக.
4) மேற்காவுகை மழையின் சிறப்பியல்புகள் மூன்று தருக.

(3x4=12 புள்ளிகள்)

6) 1) பின்வரும் பௌதீக அம்சங்களில் காணப்படும் இயற்கைத் தாவரங்களைக் குறிப்பிடுக
1) மேட்டு நிலங்கள் 2) கடல்நீர் ஏரிகள்

2) இலங்கையில் வாழும் பிரதான இனங்களைக் குறிப்பிடுக.

3) தொட்டுணர முடியாத (காண முடியாத) மரபுரிமைகள் என்றால் என்ன.

4) மரபுரிமையாகக் கருதப்படும் மனிதனால் உருவாக்கிய வேறு ஆக்கங்கள் மூன்று தருக.

(3x4=12 புள்ளிகள்)



kalvi.lk



தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education
கல்வி
අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457